மலர் : 9 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 11

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

**செப்டம்பர் 2009**

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विल्लेज मिनिस्ट्री ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

ஆண்டு சந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ.250

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**




**TVGM - 2009 செப்டம்பர்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## இருள் அடைந்த நீர் விடியற்காலத்தைப் போலிருப்பீர்.

யோபு 11:17

திருச்சி – **சோமரசம்பேட்டை**யில் கட்டப்பட்டுவரும் TVGM சிறுவர் இல்ல கட்டிடத்திற்காக ஜெபியுங்கள். கர்த்தருக்குச் சித்தமானால் **முன் பகுதியை மட்டும்** ( கீழேயும், மாடியையும் கட்டி ) **2009 அக்டோபரில்** பிரதிஷ்டை செய்ய வாஞ்சிக்கிறோம். தேவசித்தம் நிறைவேறுவதாக !



# TAMIL VILLAGE GOSPEL MISSION



## Managing Director
## Letter Dated: 08.08.2009

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களுக்கு,

**தேவசமாதானம் உண்டாவதாக!**

TVGM ஊழியங்களுக்காக ஜெபிக்கிற கொடுக்கிற,அறிமுகப்படுத்துகிற, நேசிக்கிற, உழைக்கிற ஒவ்வொருவருக்காகவும் தேவனைத் துதிக்கிறேன்.

2009 ஆகஸ்டு 17 **கடலூர்,** ஆகஸ்டு 18 **M.அழகாபுரி** ஆகிய இரண்டு கிராமங்களில் ஜெபவீடு பிரதிஷ்டை ஆராதனை செய்ய திட்டமிட்டிருக்கிறோம். இந்த பத்திரிக்கை உங்கள் கையில் கிடைக்கும் பொழுது பிரதிஷ்டை ஆராதனை முடிந்திருக்குமென எதிர்பார்க்கிறோம்.

2009 செப்டம்பர் மாதத்தில் **காவூர், வேந்தன்பட்டி, கோவில்பட்டி(லாயல்மில் காலனி)** மூன்று கிராமங்களில் பிரதிஷ்டை செய்ய வாஞ்சித்து ஜெபித்து வருகிறோம். நீங்களும் ஜெபியுங்கள்.

அநேக கிராம ஊழியர்கள் விசுவாசத்தில் கட்டி வரும் ஜெபவீட்டை பார்வையிட்டு வருகிறோம். இவர்களுக்கு TVGM சார்பிலும் ஒரு பங்கை கொடுத்து பிரதிஷ்டை செய்ய வாஞ்சிக்கிறோம்.

TVGM மூலம் 15’ X 30’ அடி அளவில் சிறிய ஜெபவீடு கட்டுவது பற்றி தான் திட்டமிடுகிறோம். ஆனால் ஊழியர்கள் அதைவிட 2 அல்லது 3 மடங்கு பெரிதாக அஸ்திபாரம் போட்டு, ஆரம்பித்து பின்பு கட்ட முடியாமல் தவிக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்படும் தேவையும் பெரிய தேவையாக உள்ளது. ஆனாலும் TVGM ஒழுங்கின்படியே உதவி செய்ய வாஞ்சிக்கிறோம். இந்த ஆண்டில் ஜெபவீடு கட்டி தருவதற்கு ஒரு சிலர் மட்டுமே முன்வந்துள்ளபடியால் நாங்கள் நேரடியாக பார்வையிட்டு, ஜெபித்து வந்த அநேக ஊழியர்களுக்கு எந்தவித உதவியும் செய்ய முடியவில்லை. பொருளாதார உதவியை கர்த்தர் எழுப்ப ஜெபியுங்கள்.

மேலும் கர்த்தருக்குச் சித்தமானால் 2009 செப்டம்பர் 7 – 14 **இலங்கைக்கு** நானும் என் தகப்பனாரும் சென்று மக்கள் நிலையை பார்வையிட்டு, 100 பேருக்கு உதவி செய்ய வாஞ்சிக்கிறோம். ஜெபியுங்கள்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

கிறிஸ்துவின் பணியில்,

ஸ்டீபன் கிறிஸ்டோபர்

# இருள் அடைந்த நீர் விடியற்காலத்தைப்போலிருப்பீர்.

யோபு 11:17

**க**ர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக ஆவலோடு காத்துக் கொண்டிருக்கும் என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே, தேவ ஊழியரே!

நாகமாத்தியனாகிய சோப்பார் என்பவர் யோபுவுக்கு சொல்லுகிற ஆலோசனைகளைப் பாருங்கள்.

**யோபு** 11:13,14: நீர் உம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்தி, உம்முடைய கைகளை அவருக்கு நேராக விரித்தால் நலமாயிருக்கும்.

உம்முடைய கையிலே அக்கிரமம் இருந்தால், அதைத் தூரத்தில் அகற்றி விட்டு, அநியாயம் உம்முடைய கூடாரங்களில் வாசமாயிருக்க வொட்டாதிரும்.

**அப்பொழுது உம்முடைய ஆயுசு காலம் பட்டப் பகலைப் பார்க்கிலும் பிரகாசமாயிருக்கும்.**

**இருள் அடைந்த நீர் விடியற்காலத்தைப்போலிருப்பீர்.**

வாக்குத்தத்தத்தை சுதந்தரிக்க நான்கு விதமான ஆலோசனைகளை யோபுவுக்கு கூறுகிறார்.

**முதலாவதாக :** இருதயத்தை ஆயத்தப்படுத்தும்.

**இரண்டாவதாக:** உம்முடைய கைகளை தேவனுக்கு நேராக விரியும்.

**மூன்றாவதாக :** கையில் அக்கிரமம் இருந்தால் அகற்றி விடும்.

**நான்காவதாக:** அநியாயம் உம்முடைய கூடாரங்களில் வாசமாயிருக்க விடாதேயும்.

என் அன்பு தேவ பிள்ளையே!

**முதலாவதாக, நம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்துவோம்.**

ஏனெனில் **இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது ( எரே.17:9)**

ஆதலால் தான் சங்கீதக்காரன்,

**சங்கீதம்** 51:10 "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்" என கெஞ்சுகிறார்.

**சங்கீதம்** 51:17 தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.

ஆதலால் நம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்துவோம்.

சங்கீதக்காரன் கூறுவதுபோல, நாமும் கூறுவோம்.**என்இருதயம் ஆயத்தமாயிருக்கிறது; நான் பாடிக் கீர்த்தனம் பண்ணுவேன் ( சங்கீதம்** 57:7 ).

**இரண்டாவதாக, நம்முடைய கைகளை தேவனுக்கு நேராக விரிப்போம். ஏன்?**

**சங்கீதம்** 24:3,4 யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்?

கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக் கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே.

**மூன்றாவதாக, இருதயத்தில் அக்கிரமம் இருந்தால் அகற்றும் என ஜெபிப்போம்.**

**சங்கீதம்** 66: 18 என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந் தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்.

நியாயத்தீர்ப்பின் நாளிலே இயேசு கூறுகிற வசனமாவது,

**மத்தேயு** 7:23 ..... அக்கிரமச் செய்கைக் காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்பதாகும்.

ஆதலால் நாம் இயேசுவே எனக்குள் அக்கிரமம் இருந்தால் அகற்றும் என கெஞ்சுவோம்.

**'பொருளாசை' யும் ஒரு அக்கிரமம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.**

**ஏசாயா** 57:17 நான் அவர்கள் **பொருளாசை**யென்னும் **அக்கிரமத் தினிமித்தம்** கடுங்கோபமாகி, அவர் களை அடித்தேன்; நான் மறைந்து, கடுங்கோபமாயிருந்தேன்; தங்கள் மனம் போன போக்கிலே, மாறுபாடாய் நடந்தார்களே.

எதைக் கண்டாலும் வாங்க வேண்டும், அவர்கள் வைத்திருக் கிறார்கள் ஆதலால் நானும் வாங்க வேண்டும் என அலைந்து திரியும் சகோதரியே, சகோதரனே, தேவ ஊழியரே! உங்களுக்காகவே தேவ வசனம் கடந்து வருகிறது.

உங்கள் வீட்டின் ஒவ்வொரு அறையையும் சுற்றி, சுற்றிப் பாருங்கள். எத்தனை பொருட்கள், பழுதாய் அல்லது பாழாய் போய் கிடக்கிறது. ஒரு நாளிலே இந்தப் பொருளை கண்டவுடன் ஓடி, ஓடி வாங்கியிருப் பீர்கள் அல்லவா? இன்று அதை நீங்கள் எட்டிக் கூட பார்ப்பதில்லை. விரும்பியதெல்லாம் வாங்குவதும், பின்பு வீணாக்குவதும் பொருளாசையே தேவ ஊழியரே!

விசேஷ கூட்டங்கள் என்று வித விதமான கலர் நோட்டிஸ், வால் போஸ்ட் அடித்து, யாரிடத்திலோ அள்ளி கொடுத்து, நீ போய்க் கொடு, அல்லது சுவரில் ஒட்டு என கொடுக் கிறீர்கள்.ஆனால் அவர்களோ வீட்டில் போட்டு விட்டு பின்பு குறிப்பு எழுதும் தாளாக மாற்றுகிறார்கள்.

ஊழியரே! உங்கள் வீட்டில் அல்லது ஆலயத்தில் எத்தனை வண்ண வண்ணமான போஸ்டர்கள் உபயோகமற்றுக் கிடக்கின்றன.

**இவைகள் எல்லாம் காணிக்கை பணம் அல்லவா?** இது பொருளாசையா அல்லது வேறு ஆசையா? சிந்திப்போம்! செயல்படுவோம்!

**நான்காவது, அநியாயம் நம்முடைய வீட்டிற்குள் , எல்லைக்குள், சபைக்குள் வேண்டாம்.**

**2 தீமோ.** 2:19 ..... கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக்கடவன்.

**நீதி.** 28:8 அநியாய வட்டியினாலும், ஆதாயத்தினாலும் தன் ஆஸ்தியைப் பெருகப் பண்ணுகிறவன், தரித்திரர் பேரில் இரங்குகிறவனுக்காக அதைச் சேகரிக்கிறான்.

**1 யோவான்** 1:9 நம்முடைய பாவங் களை நாம் அறிக்கையிட்டால், பாவங் களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவருமாயிருக்கிறார்.

**1 யோவான்** 1:8 நமக்குப் பாவமில்லை யென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.

ஆதலால் என் அன்பு தேவப் பிள்ளைகளே! அநியாயம் நம்முடைய வீட்டில் இல்லாதபடி பார்த்துக் கொள்வோம்.

மேற்கண்ட 4 காரியங்களையும் செய்யும் பொழுது கிடைக்கும் ஆசீர்வாதம்.

**யோபு** 11:17 **இருள் அடைந்த நீர் விடியற்காலத்தைப்போலிருப்பீர்.**

**பக்தன் பாடுகிறார்:**

***பாவ இருள் என்னை வந்து***
***சூழ்ந்து கொள்கையில்***
***தேவனவர் தீபமாய்***
***என்னைத் தேற்றினார்.***
***ஆனந்தம் கொள்ளுவேன்,***
***அவரை நான் பாடுவேன்***
***உயிருள்ள நாள் வரையில்***
***எந்தன் நாவில் புதுப்பாட்டு,***
***எந்தன் இயேசு தருகிறார்.***

பாடுங்கள் பாடிக்கொண்டேயிருங்கள்.

இன்றைக்கு, உங்கள் வாழ்க்கையின் மறைந்திருக்கும் **"இருள்"** என்ன? என்பதை தேவனுடைய சமூகத்தில் ஆராய்ந்து பாருங்கள்.

பாவ இருளா? சாப இருளா? வேலை இல்லா இருளா? குழந்தை இல்லா இருளா? கடன் என்ற இருளா? பிசாசின் தொல்லை என்ற இருளா? பில்லி சூனிய இருளா? வியாதி என்ற இருளா? ஏமாற்றம் என்ற இருளா? தாமதம் என்ற இருளா? வஞ்சகம் என்ற இருளா? ஒவ்வொன்றும் ஒரு இருளாகவே நம்முடைய வாழ்க்கையில் காணப்படுகின்றது.

கர்த்தருக்குள் வாழுகின்ற உனக்குள்ளும் ஏதோ ஒரு **"இருள்"** வாட்டிக் கொண்டேயிருக்கிறது. என் அன்பு சகோதரியே, ஊழியரே உங்கள் மகளால் அல்லது மகனால் அல்லது மாமியாரால் அல்லது உடன் வேலை செய்பவரால், சபை விசுவாசியால் இருளடைந்து போயிருக்கிறீர்களா?

துக்கம் தாங்க முடியாமல் **ஏன்? ஏன்?** என உங்கள் இருதயத்தில் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறீர்களா?

**பக்தன் பாடுகிறார்:**

***இருள் சூழ்ந்த லோகத்தில்***
***இமைப் பொழுதும் தூங்காமல்***
***கண்மணி போல என்னை***
***கர்த்தர் இயேசு காத்தாரே***
***கானங்களால் நினைத்து***
***காலமெல்லாம் பாடுவேன்.***
***அஞ்சிடேன், அஞ்சிடேன்***
***என் இயேசு என்னோடிருப்பதால்***

என்ற பாடலை பாடும் நாட்களை கர்த்தர் உங்களுக்கு தந்தருள்வாராக.

**இருள் அடைந்த நீர்**
**விடியற்காலத்தைப்போலிருப்பீர்.**

ஆமென். உங்கள் விசுவாசத்தை பின்வருமாறு அறிக்கை செய்யுங்கள்.

**இருள் அடைந்த நான்**
**விடியற்காலத்தைப்போலிருப்பேன்.**

என அடிக்கடி அறிக்கை செய்யுங்கள்.

**உங்கள் விசுவாசமே உலகத்தை**
**ஜெயிக்கிற ஜெயம். ஆமென்.**

**நீங்கள் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்**

**100 கிராம ஊழியம்** மாதாந்திர பத்திரிக்கையில், உங்களைக் கவர்ந்த பகுதியை **சாட்சியாக எழுதி** உங்கள் முழு முகவரி, தொலைபேசி, ஈமெயில் உடன் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு அனுப்புங்கள்.

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## உன் ஊழியத்தை நிறைவேற்று. 2 தீமோ. 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

## தூத்துக்குடி - சாத்தான்குளம் யூனியன் 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** 2009 **செப்டம்பர் 28** திங்கள் காலை 9 மணி முதல் **அக்டோபர்** 3 சனி இரவு 10 மணி முடிய **தூத்துக்குடி – சாத்தான்குளம் யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2009 செப்டம்பர் 28** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2009 அக்டோபர் 3** சனி இரவு **7 - 10** முடிய

**( 2009 செப். 28 - அக். 2 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**ஏ.ஜி. சர்ச்,**
**தோப்புவளம் ரோடு,**
**சாத்தான்குளம் - 628 704.**
**தூத்துக்குடி மாவட்டம்.**
**செல் : 94429 98974**

**நன்றி** : உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர் ஜஸ்டின்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# கன்னியாகுமரி - திருவட்டார் யூனியன் 100-கிராம ஊழிய அறிக்கை

**தேதி : 20.07.2009 முதல் 24.07.2009 முடிய**

## THANKS: PATMOS (Dr. Tor & Sis. Fera)

கர்த்தருடைய கிருபையினால் 20.07.2009 முதல் 24.07.2009 வரை **கன்னியாகுமரி மாவட்டம் – திருவட்டார் யூனியனில்** 100–கிராம ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெற்றது. முதல் நாள், கடைசி நாள் கூடுமிடம், உணவு, சுவிசேஷ புத்தகங்களின் பார்சல் செலவுகள் இவைகளை **இந்தியன் பிலதெல்பியா** சபையின் **போதகர் டாக்டர். ஏசுதாசன்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.



கிளை அலுவலக ஊழியர்கள்

இந்த ஊழியம் நடைபெறுவதற்கு நாகர்கோவில் TVGM கிளை அலுவலக ஊழியர்கள் அதிகமாக பிரயாசப்பட்டார்கள். அலுவலக ஒருங்கிணைப்பாளர் **சகோதரி ஷோபனா** தங்களது ஊழியங்களைப் பற்றிக் கூறி, அலுவலக ஊழியர்களோடு சிறப்பு பாடல்களைப் பாடி உற்சாகப்படுத்தினார்கள். மற்றும் கிராம ஊழியர்களுக்கு பிரயாணப்படி, இனிப்பு இவைகளையும் கொடுத்தார்கள்.



58 கிராம ஊழியர்கள்

தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களிலிருந்து 58 கிராம ஊழியர்கள் வந்து கலந்து கொண்டு ஊழியம் செய்தார்கள்.

முதல் நாள் ஜெபத்தில் திருவட்டார் யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் **Rev. Dr. ஏசுதாசன்** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள்.





குழு, குழுவாக ஜெபித்தல்

பின்பு ஊழியர்கள் 12 குழுக்களாகப் பிரிந்து அவரவர் ஊழியம் செய்ய வேண்டிய கிராமங்களுக்காக குழு, குழுவாக ஜெபித்தார்கள். மதிய உணவிற்கு பிறகு ஊழியம் செய்யும்படியாக கிராமங்களுக்குள் குழு குழுவாக கடந்து சென்றார்கள்.

சுவிசேஷம் அறிவித்தல்





இவர்கள் கிராமங்களில் 5 நாட்கள் தங்கிக் கொண்டு வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷம் கொடுத்து **இயேசுகிறிஸ்துவே கர்த்தர்** என்று அறிவித்து ஊழியம் செய்தார்கள். மொத்தம் 11,900 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 22,000 கைப்பிரதிகள், 10,000 சிலுவைக் கொடிகள் இலவசமாக வழங்கப்பட்டது.

5 நாட்கள் ஊழியங்களை முடித்து கிராம ஊழியர்கள் முதல் நாள் கூடிய இடத்திலேயே கூடி ஜெபித்து கர்த்தர் தங்களை எப்படி கிராமங்களில் நடத்தினார் என்பதை சாட்சியாக சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்த ஜெபத்தில் TVGM ஸ்தாபகர் சகோ. P.T. கிறிஸ்டோபர் அவர்கள் கலந்து கொண்டு, ஜெபத்தில் நடத்தி ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்கள். ஊழியத்தின்போது சந்திக்கப்பட்ட வர்களில் 86 பேர் தங்கள் விலாசங்களைக் கொடுத்து வேதபாடங்களை தபால் மூலம் அனுப்பக் கேட்டார்கள். ஜெபத்திற்கு பின்பு கிராம ஊழியர்களுக்கு பிரயாணப்படி இனிப்பு வழங்கப்பட்டது. **தேவனுக்கே மகிமை!**

இறுதி ஜெபவேளை



**நன்றி** இம்முகாமின் சகல பணிகளையும் கவனித்து செயல்பட்ட **சகோ.பன்னீர்செல்வம்** அவர்களுக்கு நன்றி!

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு:1 சகோதரி மாரியம்மாள், எஸ்தர் பேபி, அபியேல் அந்தோணியம்மாள், சாந்தி ஸ்டேன்லி**

உம்மன்கோடு பகுதியில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்த போது, ஒரு பெண் கேவலமான வார்த்தைகளைச் சொல்லி, கல், கட்டைகளை எங்கள் மேல் எறிந்து விரட்டினாள்.அந்தப் பெண்ணின் புருஷன் எங்களை போலிஸில் பிடித்துக் கொடுத்து விடுவேன் என்று மிரட்டினான். ஆனாலும் நாங்கள் சோர்ந்து போகாமல் அடுத்த பகுதிக்கு சென்று ஊழியம் செய்தோம். மொத்தம் 800 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:2 சகோதரி. கிரேஸ் பத்மா, வசந்தா ஸ்டீபன், ஜெபமணி, அன்னக்கிளி, மேரிமீனா, சுப்புலட்சுமி**

செட்டிசாவிளை, சீயோன் மலை, பூந்தோப்பு, ஒடப்புக் குளம் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். சில ஆர்.சி. கிறிஸ்தவர்கள் தங்கள் பகுதிக்கு வரவேண்டாம் என்று எதிர்ப்பு தெரிவித்தனர். மற்றவர்கள் ஆர்வமாகக் கேட்டு சுவிசேஷப் புத்தகங்களைப் பெற்றுக் கொண்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 860 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:3 சகோ. கூசை மாணிக்கம், பெஞ்சமின், ஸ்டான்லி, நோவா, வசந்த குமார்.**

சுருளக்கோடு ஊராட்சியிலுள்ள கிராமங்களில் வீடு வீடாக சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்து, இயேசுவின் நற்செய்தியை அறிவித்தோம். மக்கள் வாஞ்சையோடு ஏற்றுக் கொண்டார்கள். ஊழியத்திற்கு நல்ல ஆதரவு கிடைத்தது. எதிர்ப்பே இல்லை. மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 830 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு:4 சகோ. இஸ்ரவேல், இஸ்தாக்கி எபிநேசர், ஸ்டீபன் ராஜ், யோசுவா**

புலிப்பனம் கிராமத்தையும் இதைச் சுற்றியுள்ள 7 கிராமங்களுக்கும் சென்று வீடு வீடாக யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். சில முஸ்லீம் இன மக்கள் மட்டும் வாங்கவும், கேட்கவும் மறுத்தார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள் 850 சிலுவைக் கொடி கொடுத்தோம்.

**குழு:5 சகோதரி. டோராலாசர், அந்தோணிமேரி, அமிர்தம், சீலா, லூயிஸ் அம்மாள்**

ஏற்றக்கோடு பகுதியில் ஊழியம் செய்து வரும்போது ஒரு வாலிபன் இப்போது உங்களுக்கேற்ற அரசாங்கம் ஆட்சியில் உள்ளது. அதனால் இப்படி புத்தகம் கொடுக்கிறீர்கள். மத மாற்ற தடைசட்டம் இருந்திருக்குமானால் உங்களை கிளியை விரட்டுகிறதுபோல விரட்டியிருப்போம் என்றார். அங்கு ஒருவருக்கு உடல் முழுவதும் தேமல் போல் வெள்ளை வட்ட வட்டமாக இருந்து அரிப்பு எடுத்து மிகவும் கஷ்டப்பட்டார். எண்ணெய் பூசி ஜெபித்தோம். சிறிது நேரத்தில் வட்டவட்டமாக காணப்பட்ட வெள்ளை உடலில் மறைந்து புது உற்சாகத்துடன் காணப்பட்டார். அதே போல கனகம் என்ற ஆசிரியைக்கு வலது கால் ஆப்ரேஷன் செய்ததால் கால் சூம்பி நடக்க முடியாமல் இருந்தது. நாங்கள் ஜெபம் செய்து எண்ணெய் பூசினோம் கர்த்தர் அவர்களுக்கு உடனே எழுந்து நடக்க பெலன் தந்தார். தேவனுக்கே மகிமை. மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தங்கள், 810 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:6 பாஸ்டர். ஆல்வின், சகோ. ஜோசப் முரளிதரன், தாவீது தங்கவேல், பால்ராஜ்.**

மாத்தார், குட்டக்குழி, செவரக்கோடு, ஏற்றக்கோடு கிராமங்களில் வீடுகள் தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து சத்தியத்தை அறிவித்து, அநேகருக்காக ஜெபித்தோம். ஒரு வீட்டில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்துவிட்டு கொஞ்ச தூரம் கடந்து வந்ததும் அந்த வீட்டார் எங்களை கூப்பிட்டு உங்கள் புத்தகம் வேண்டாம் என்று திருப்பிக் கொடுத்தார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 840 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:7 சகோதரி. விமலாதாஸ், அன்னாள், கிளமெண்ட்ஸ்மேரி, தேவநேசம், ரெபேக்கா லட்சுமி.**

நாங்கள் சென்ற ஒவ்வொரு வீட்டிலும் மக்கள் இன்முகத்துடன் புத்தகங்களைப் பெற்றுக்கொண்டனர். ஒரு வீட்டில் உள்ள ஒரு முதியவர் மட்டும் இயேசுவைப் பற்றி பேசக்கூடாது என்று கடுமையாகப் பேசினார். இன்னொரு வீட்டில் ஒரு பெண் உங்கள் இயேசு சாமியை நாங்கள் ஏன் கும்பிட வேண்டும் என்று எதிர்த்து கேட்டாள். ஆனால் அதே வீட்டில் உள்ள மற்றொரு பெண் ஆர்வமாக புத்தகத்தைப் பெற்றுக்கொண்டாள். அநேகருக்காக ஜெபித்தோம். மொத்தம் 1010 சுவிசேஷப் புத்தகம் 820 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு:8 சகோ. அருள்ராஜ், சாமுவேல், பீட்டர் ராமலிங்கம், ஜெபமலைநாதன், அந்தோணி.**

நாங்கள் சென்ற கிராமங்களில் அதிகமான பெண்கள் தங்கள் குடும்ப கஷ்டங்களை சொல்லியும், சில பெண்கள் தங்கள் கணவர்கள் குடியிலிருந்து விடுதலை பெறவும் ஜெபிக்கும்படி சொன்னார்கள். இவர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 830 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:9 சகோதரி எஸ்தர், தெபோராள், பிச்சையம்மாள், செலின்.**

திருவரம்பு ஊராட்சியிலுள்ள கிராமங்களில் நற்செய்தியைக் கூறினோம். எங்களுக்கு அங்கு வரவேற்பும் இல்லை. எதிர்ப்பும் இல்லை. **கொல்வேல்** என்ற கிராமத்தில் ஒரு மனிதன் எங்களை சூளையில் வேலை செய்தால் 150 ரூபாய் தருவார்கள். இப்படி இந்த புத்தகங்களை எடுத்துக் கொண்டு ஏன் அலைகிறீர்கள் என்று ஏளனமாகப் பேசினான். ஆனாலும் அந்த ஊரில் மற்ற எல்லாருக்கும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 840 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:10 சகோ.மாற்கு மாரியப்பன், மகாராஜன், கிங் காலமன், பிரபுதாஸ்.**

ஈத்தவிளை, அவரிவிளை, காஞ்சரத்துக்கோணம் கிராமங்களில் ஊழியம் செய்தபோது வீடுகளில் மக்கள் ஆர்வமுடன் சுவிசேஷத்தைக் கேட்டு புத்தகத்தை வாங்கிக் கொண்டார்கள். ஆறுதல் இல்லாமல் இருந்த பலரை சந்திக்கவும், அவர்களுக்கு ஆறுதல் கூறி ஜெபிக்கவும் கர்த்தர் எங்களை பயன்படுத்தினார். வளிக்கலாம்பாடு கிராமத்தில் ஊழியம் செய்துவிட்டு வரும்போது. சிலர் எப்படி அந்த கிராமத்தில் ஊழியம் செய்தீர்கள். அங்கு சுவிசேஷம் சொல்ல முடியாதே! அதிக எதிர்ப்புகள் இருந்திருக்குமே, யாரும் உங்களை எதிர்க்க வில்லையா ? என்று கேட்டனர். கர்த்தர் எங்களை நடத்தினார் என்று தேவனை மகிமைப்படுத்தினோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 820 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:11 சகோதரி மேரி செல்லாபாய், மணியம்மாள், தேவகிருபை,லீதியாள், சலோமி சம்மனசு.**

மேக்காமண்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 8 கிராமங்களில் ஊழியம் செய்தோம். அநேகர் விருப்பத்தோடு ஏற்றுக்கொண்டார்கள். சில பெண்கள் ஏன் இங்கு வந்து புத்தகம் கொடுக்கிறீர்கள், போங்க போங்க என்று விரட்டினார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:12 சகோதரி ராணி சந்திரா, ஜோதிமணி, கஸ்தூரி, மரியாள், கிருபா பழனியம்மாள், ரூத்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் கஷ்டம், கண்ணீர்களில் இருந்தவர்களை சந்திக்க முடிந்தது. ஆறுதலான கர்த்தரின் வார்த்தைகளை சொல்லி ஜெபித்தோம். தெக்குறிச்சியிலிருந்து வன்னியூருக்கு போவதற்கு ஒரு மனிதனிடம் வழி கேட்டோம். அவர் ஒரு போலிஸ்காரர் என்று சொல்லி எங்களைப் பற்றி விசாரித்தார். நாங்கள் அட்ரஸைக் காட்டி ஊழியத்தைப் பற்றி சொன்னோம். அவர் எங்கள் வீட்டில் வந்து ஜெபம் செய்வீர்களா ? என்றார். நாங்கள் ஆம் ஜெபம் செய்வோம் என்றோம். அவர் ‘ என் குடும்பத்தில் சமாதானமில்லை’ என்று கண்ணீரோடு ஜெபிக்கச் சொன்னார். நாங்கள் ஜெபித்து விட்டு வந்தோம். மிகவும் சந்தோஷப்பட்டார். மொத்தம் 1090 சுவிசேஷப் புத்தகங்கள், 830 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## துதி, கனம், மகிமை இயேசுகிறிஸ்து ஒருவருக்கே!

**தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை. லூக்.1:37**

*இந்த காரியம் நடக்குமா? வியாதி நீங்குமா? கடன்பிரச்சனை மாறுமா? என்றெல்லாம் நீங்கள் கலங்கிக் கொண்டிருக்கலாம்.* ***தேவனால் கூடாத காரியம் ஒன்றுமேயில்லை.*** *நாம் ஜெபித்தால் இயேசு அற்புதம் செய்வார். கடந்த நாட்களில் ஜெபத்தைக் கேட்டு இயேசு செய்த அற்புதங்களில் சில . .*

1. **சகோ. அலெக்சாண்டர், நாகர்கோவில்**

என் மகளுக்கு மார்புவலி இருப்பதாக ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். நீங்கள் ஜெபித்தீர்கள். இப்பொழுது அந்த வேதனை இல்லை. தேவனுக்கே மகிமை.

2.**சகோ. சாமுவேல், கோவை.**

என் மகள் அடிக்கடி இழுப்பு வியாதியினால் கஷ்டப்பட்டாள். தேவஊழியர்களாகிய நீங்கள் ஜெபித்தீர்கள். கர்த்தர் பரிபூரண விடுதலையைக் கொடுத்தார்.

3. **சகோதரி ஜெஸ்பர், நீலகிரி.**

எனக்கு வயிற்று வலி இருந்தது. மருத்துவர்கள் பரிசோதனை செய்து, மாத்திரை கொடுத்து அனுப்பி விட்டார்கள். நான் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் சுகம் கொடுத்தார்.

4. **சகோ. பாஸ்கரன், காஞ்சிபுரம்.**

என் பேரனுக்கு டான்போஸ்கோ பள்ளியில் இடம் கிடைத்தால் சாட்சி எழுதுவதாக ஜெபித்தேன். இடம் கிடைத்து விட்டது.

## 100-கிராம ஊழியம் பத்திரிக்கையின் மூலம் இயேசுவின் மகத்துவங்கள்!

1. **சகோதரி ரோஸி, சேலம்.**

எனக்கு உடம்பில் அம்மை போட்டு பள்ளிக்கு செல்ல முடியாமல் வேதனையடைந்தேன். 2009 ஜூலை மாத பத்திரிக்கையின் வாக்குத்தத்தம் **"கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்** (உபா.7:15)" என்ற வசனத்தின் மூலம் கர்த்தர் என்னைத் தேற்றினார்.

2. **சகோதரி பியூலா, வேலூர்.**

2009 ஜூலை மாத பத்திரிக்கையின் வாக்குத்தத்த வசனத்தின்படி ஆறு வருடமாக இருந்த வியாதி சுகமாயிற்று. ஒவ்வொரு வாக்குத்தத்தமும் என் வாழ்க்கையில் நிறைவேறுகிறது.

3. **சகோதரி மேரி, மான்செஸ்டர்.**

உங்கள் மாதாந்திர பத்திரிக்கை ஆசீர்வாதமாக இருக்கிறது. எனக்கு விசா கிடைத்தால் பத்திரிக்கையில் சாட்சி எழுதுவதாக ஜெபித்தேன். கர்த்தர் விசா தந்து விட்டார்.

4. **சகோதரி சரளா, பெங்களூர்.**

100-கிராம ஊழியம் பத்திரிக்கை எனக்கு ஆறுதலாய் இருக்கிறது. ஒவ்வொரு மாதமும் படித்து விட்டு மற்றவர்களுக்கும் பத்திரிக்கையை படிக்க கொடுக்கிறேன். எல்லோருக்கும் ஆறுதலாய் இருக்கிறது. அற்புதம் நடக்கிறது. **தேவனுக்கே மகிமை.**

**"100- கிராம ஊழியம்" பத்திரிக்கையை உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்! ஜெபியுங்கள்!**

## புற மத நண்பர்கள் வாழ்வில் இயேசு செய்த அற்புதங்கள்!

1. **சகோதரி ராதா, திருச்சி.**
நான் 8வது செமஸ்டர் தேர்வில் வெற்றி பெற வேண்டுமென ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். எல்லா பாடங்களிலும் வெற்றி பெற்றுவிட்டேன்.

2. **சகோதரி ருக்மணி, திண்டுக்கல்.**
எங்கள் பள்ளியில் நடந்த +2, 10ம் வகுப்பு தேர்வுகளில் தாங்கள் ஜெபித்தபடியே கர்த்தர் நல்ல ரிசல்ட்டை தந்தார். தேவனுக்கே மகிமை.

3. **சகோதரி கிருஷ்ணவேணி, நாகை.**
நான் விரும்புகிற இடத்தில் வேலை கிடைத்தால் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு விரும்பின இடத்தில் வேலை தந்தார்.

4. **சகோதரி சசிகலா, கடலூர்.**
நான் B.Sc.-ல் நல்ல மதிப்பெண் எடுத்தால் சாட்சி எழுதுவதாக ஜெபித்தேன்.கர்த்தர் 1st Class–ல் வெற்றி பெறச் செய்தார்.

## தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன் பத்திரிக்கையின் மூலம் இயேசுவின் மகத்துவங்கள்!

1. **சகோதரி காமாட்சி, பசுவப்பட்டி.**
என் அண்ணன் மகளுக்கு கரண்ட் பிடித்து ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் சேர்த்தோம். அந்த நாளில் நீங்கள் அனுப்பிய ஜுன் மாத பத்திரிக் கையில் **'நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்'** என்ற வசனம் இருந்தது. இந்த வசனத்தின்படியே மகளுக்கு இயேசு ஜீவனைக் கொடுத்தார்.

2. **சகோதரி சங்கீதா, திருச்சி.**
2009 ஜுன் மாதஇதழில் **'ஒரு நிமிஷம்'** என்ற தலைப்பில் எதை யெல்லாம் இழக்கிறோம் என்று படித்து தெரிந்து கொண்டேன். அது எனக்கு ஆறுதலாக இருந்தது.

3. **சகோதரி பத்மா, கன்னியாகுமரி.**
2009 ஜுலை மாதஇதழில் **"கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்** (உபா.7:15)" என்ற வாக்குத்தத்தத் தின்படி கர்த்தர் என் சுகர் வியாதியை நீக்கினார்.

4. **சகோதரி அமுதவள்ளி, ஈரோடு.**
**தமிழ்வில்லேஜ் காஸ்பல் மிஷன்** பத்திரிக்கையில் வரும் வாக்குத்தத்தம் எங்களை தேற்றுவதாகவும், எங்களுக் காகவே அனுப்பப்பட்டதாகவும் இருக் கிறது. **தேவனுக்கே மகிமை!**

**தமிழ்வில்லேஜ் காஸ்பல் மிஷன்**
*என்ற மாதஇதழ் புற மத நண்பர் களுக்காகவே வெளியிடப்பட்டு வருகிறது. உங்கள் அருகிலுள்ள இயேசுவை அறியாத புற மத நண்பர்களுக்கு இந்த பத்திரிக் கையை அறிமுகம் செய்யுங்கள்.*

### ஜெபவிண்ணப்பங்களை அனுப்பி வையுங்கள்!

உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் ஜெபிக்கும்போது இயேசு கட்டாயம் அற்புதம் செய்வார். எனவே உங்கள் ஜெபவிண்ணபப்ங்களை இன்றே எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். உங்களுக்காகவே ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் காலை 9 -12 மணி வரை உபவாசித்து ஜெபிக்கிறோம்.

"**உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்**". **மீகா 7:15**

# கலிலேயா முகாம் - 2009

**(மகிழ்ச்சியான நாட்கள்)**

**நாள் : 2009 அக்டோபர் 2,3,4 வெள்ளி, சனி, ஞாயிறு**

**இடம் : கோடாவிளை பஸ் ஸ்டாப்**

(உவரிக்கும் கூடன் குளத்திற்கும் மத்தியில்)

**நேரம் : தினமும் மாலை 6.00 மணிக்கு**

(100 கிராம ஊழியர் சாட்சிகள், சனிக்கிழமை காலை 10-1மணி)

**தேவ செய்தியாளர்:**

## பாஸ்டர். மார்கஸ் லூயிஸ் (சென்னை)

**(வரம்பெற்ற தேவனுடைய ஊழியக்காரர்)**

**ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள் ! துதியுங்கள்!**

| **முகாம் ஒருங்கிணைப்பாளர்** | **மீட்பரின் பணியில்** |
|---|---|
| **திரு. இரத்தினம் ஆசிரியர்** | **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** |
| தொலைபேசி : **04637276306** | டைரக்டர், |
| **திரு. மனோகர் ஆசிரியர்,** | தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன், |
| தொலைபேசி : **04637 272664** | **100** கிராமம், |
| மொபைல் : **94864 81522** | திருச்சி – 620 102. செல் : **9443544628** |

## TVGM அறிமுகப்பணி அலுவலகம்
## 2009 ஜுலை மாத ஊழிய அறிக்கை

கன்னியாகுமரி மாவட்ட **"100–கிராம ஊழியம்"** ஜுலை 20 முதல் 24 முடிய திருவட்டார் யூனியனில் உள்ள 99 கிராமங்களில் எந்தவித தடையுமின்றி நடைபெற கர்த்தர் உதவி செய்தார். தேவைகளை அற்புதமாக சந்தித்தார். ஊழியம் செய்யும்படி வந்திருந்த 58 தன்னார்வத் தொண்டர்களையும் கர்த்தர் சுகமாக பாதுகாத்து, சுவிசேஷம் அறிவிக்க பயன்படுத்தினார்.

நாகர்கோவில் அறிமுகப்பணி அலுவலகத்தின் மூலம் இதுவரை சந்திக்கப்பட்ட கிராமங்களில் பின்தொடர்பணி நேரில் சென்று செய்ய ஜெபித்து வருகிறோம். கர்த்தர் திறந்தவாசலைத் தர உங்கள் ஜெபங்கள் தேவை. ஜெபியுங்கள்.

ஊழியத்தின் எல்லைகளை விரிவாக்க கர்த்தர் அதிசயமான வழிகளை திறந்து தருகிறார். தொடர்ந்து எங்களுக்காக, ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001

கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவாஞ்சலின்,**
செல்: **98658 26424** போன் : **04652 - 277251**

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** புதுக்கோட்டை மாவட்டம் இயேசுவின் மாவட்டமாக மாறும்படியும், ஜெபநடை, சுவிசேஷக் கூட்டங்கள், சுவிசேஷப் புத்தக விநியோகம் அதிகமாக நடைபெறவும், **100 கிராம ஊழியம்** மாதந்தோறும் நடைபெறவும், கிறிஸ்தவ சமூகப் பணிகள் பெருகவும் ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** 2009 அக்டோபர் 2,3,4 நடைபெறும் கோடாவிளை–கலிலேயா முகாமுக்காக ஜெபியுங்கள். தேவ செய்தியைக் கொண்டு வரும் **பாஸ்டர் மார்க்கஸ் லூயிஸ்** அவர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தும் படியாகவும் அநேகர் கிறிஸ்துவுக்குள் பெலன் கொள்ளவும் கிராம ஊழிய தரிசனம் பெறவும் இயேசுவுக்கு சாட்சியாக ஜீவிக்கவும் ஜெபியுங்கள்.

**புதன்:** கோயம்புத்தூர் **சித்ரா A.G சபை போதகர் பாஸ்டர். டேனியல்** மிகுந்த ஆத்தும பாரத்துடன் தூத்துக்குடி மாவட்டம் **முதலூரில், செப்டம்பர் 11-13** வரை ஒழுங்கு செய்துள்ள சுவிசேஷக் கூட்டத்தின் மூலம் அநேகர் இரட்சிக்கப் படவும் ஒரு மாபெரும் எழுப்புதல் காணப் படவும் ஜெபியுங்கள்.

தேவ செய்தி அளிக்கும் **பாஸ்டர். சார்லஸ் ஆரோன், பாஸ்டர். ராஜாமணி, சுவிசேஷகர்.நெல்லை ஜெபராஜீக்காக** ஜெபியுங்கள்.

**2009 செப்டம்பர் 7 முதல் 12 வரை முதலூர்** பகுதியில் **100 கிராம ஊழியத்தின்** மூலம் செய்யப்படும் **விசேஷ சுவிசேஷப் பணிக்காகவும்** , திறந்த வாசலுக்காகவும் ஜெபியுங்கள்.

**வியாழன்:** இது வரையிலும் TVGM மூலம் கட்டப்பட்டுள்ள **ஜெபவீடு**களில் ஆத்துமாக்களின் அறுவடை பெருகவும், இந்த மாதம் புதிதாக பிரதிஷ்டை செய்ய விருக்கும் **தொட்டியம், பெருவளப்பூர்** ஜெபவீட்டிற்காகவும் தேவனைத் துதியுங்கள். **ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பமும் கர்த்தருக்கு ஒரு ஜெபவீட்டை** கட்டுவதற்கு தங்கள் இருதயத்தில் தீர்மானம் செய்யவும் செயல்படுத்தவும் கர்த்தர் கிருபை புரிய ஜெபியுங்கள்.

**வெள்ளி:** 2009 செப்டம்பர் 7–14 வரை சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர் மற்றும் சகோ. P.T.கிறிஸ்டோபர் ஆகிய இருவரின் இலங்கை ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.யுத்தத்தில் பாதிக்கப்பட்ட 100 பேரைத் தெரிந்தெடுத்து உதவ வாஞ்சிக்கிறோம். ஜெபியுங்கள்.

**சனி:** நாகர்கோவில் அறிமுகப் பணி அலுவலகத்திற்கு ஒரு **ஆம்னி வேன்** மற்றும் **வேப்பமூடு/வடசேரி** பகுதியில் **சொந்த கட்டிடம்** கர்த்தர் கிருபையாக கொடுக்கும்படி ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** கிறிஸ்தவ தலைமைத்துவ மையம் அமைக்க தனி டிரஸ்ட் மற்றும் தேவையான நிலங்கள் வாங்கப்படவும் நல்ல நிர்வாகத் திறமையுள்ள உதவியா ளர்கள் கிடைக்கவும்,**சகோ. ஸ்டீபனுக்கு** தெளிவான தரிசனத்தையும் உதவிக் கரங்களையும் கர்த்தர் கிருபையாக கொடுக்கவும் ஜெபியுங்கள்.

**தூத்துக்குடி மாவட்டம் - முதலூர் பகுதியை சுற்றியுள்ள கிராமங்களில் 2009 செப்டம்பர் 7 திங்கள் முதல் 12 சனி முடிய விசேஷ சுவிசேஷப்பணி.**

(அனைத்து சபையிலுள்ள ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம்)

திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய 2 மாவட்டங்களிலிருந்து செப்டம்பர் 7 திங்கள் காலை **8** மணி முதல் 12 சனி மதியம் முடிய ( **6** நாட்கள் ) முதலூர் பகுதியைச் சுற்றி கிராம ஊழியம் செய்ய வாஞ்சையுள்ள ஆண், பெண் இருபாலரும் TVGM தலைமை அலுவலகத்திற்கு ரூ.**5/–** பதிவுக் கட்டணம் அனுப்பி முழு முகவரியுடன் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**6** நாட்களும் கலந்துகொள்பவர்களுக்கு மட்டும் போக, வர குறைந்த கட்டண பிரயாணப் படி வழங்கப்படும் (பஸ் டிக்கெட் கொண்டு வர வேண்டும்).

**6** நாட்கள் ஊழியத்திற்கு வருபவர்கள் கிராமத்திலேயே இரவு தங்கவும், கர்த்தர் கொடுக்கும் இடத்தில் சாப்பிட்டுக் கொள்ளவும், வீடுவீடாக அலைந்து திரிந்து சுவிசேஷம் சொல்ல ஆயத்தமாக இருக்க வேண்டும்.

ஒருவேளை பிரயாணப்படி எதிர்பாராமல் ஊழியம் செய்ய வருபவர்கள் தங்களுக்கு வசதியான நாளில் வந்து போகலாம்.

ஆனால் TVGM தலைமை அலுவலகத்திற்கு ரூ.**5/–**பதிவுக் கட்டணம் அனுப்பி, நீங்கள் **முதலூருக்கு வந்து சேரும் நாளையும், நேரத்தையும், திரும்பி வீட்டிற்கு போகும் நாளையும், நேரத்தையும்** குறிப்பிட்டு தபால் எழுதி அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

அப்படியானால் மட்டுமே நாங்கள் உங்களுக்கு ஊழியம் செய்ய வேண்டிய கிராமத்தை ஒழுங்கு செய்து தர முடியும்.

பதிவுக் கட்டணம் கிடைத்தவுடன் நீங்கள் வர வேண்டிய விலாசம் அனுப்பி வைக்கப்படும். **தொடர்புகளுக்கு** : சகோ. பன்னீர் – செல்: **9943281640**

**(TVGM** தலைமை அலுவலக முகவரி கடைசி பக்கம் உள்ளது**)**

**பிறந்தநாள் கொண்டாட்டம் – 29.07.09**






TVGM தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் **சகோதரி ஜோதி** அவர்களின் 64வது பிறந்தநாளில் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு **கேக்** வழங்கினார்கள்.

**நன்றி: மகன் எபி** சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு காணிக்கை வழங்கி, பொம்மை கதையின் மூலம் தேவசெய்தி வழங்கினார்கள்.

# அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்!

**ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்.** யோவான் 12:26.

இன்று அநேக தேவ ஊழியக்காரர்கள் டி.வி. மூலமாகவும், சுவிசேஷக் கூட்டங்களின் மூலமாகவும், எழுப்புதல் கூட்டங்களின் மூலமாகவும் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைக் குறித்து ஜனங்களுக்கு எடுத்துரைப்பதால் அநேக மக்கள் தேவனைத் தேடவேண்டும் என்ற உணர்வைப் பெற்றுள்ளார்கள்.

அதிலும் சிறப்பாக தேவனுக்குக் கொடுத்தால் பலமடங்காக திருப்பி கொடுக்கிறார் என்ற உண்மையை அறிந்து, நன்றாகக் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். இதை நினைக்கும்பொழுதெல்லாம் தேவனைத் துதிக்கிறேன்.

ஆனாலும் சபைகளில் செய்தி கொடுக்கும்பொழுது, ஊழியத்திற்கு ஆட்கள் தேவை என கூறும்பொழுது, யாருமே முன்வருவதில்லை.

நன்றாகப் பாடுகிறார்கள், ஜெபிக்கிறார்கள், தேவனைத் துதிக்கிறார்கள், உபவாசிக்கிறார்கள், சபையிலே பிரசங்கிக்கிறார்கள், சாட்சி கூறுகிறார்கள். ஆனாலும் ஊழியத்தின் பாதையில் முழு நேரமாக அலுவலகப் பணிக்கோ, கிராம ஊழிய சுவிசேஷப் பணிக்கோ அர்ப்பணித்தவர்கள் தேவையெனக் கூறும்பொழுது அப்படியே பின்வாங்கி விடுகிறார்கள்.

ஊழியத்தை நேசிக்கிறார்கள், கொடுக்கிறார்கள், ஜெபிக்கிறார்கள், ஊக்குவிக்கிறார்கள். ஆனால் தாங்கள் முன்வருவதில்லை. தங்கள் பிள்ளைகளை முழு நேர ஊழியத்திற்கு அர்ப்பணிக்க, அனுப்ப முன்வருவதில்லை. இவைகளை பார்க்கும்பொழுது மிகவும் வேதனையாக இருக்கும்.

இன்று உங்களைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தின போதகரை, சுவிசேஷகரை உங்கள் மனதில் ஒரு விசை சிந்தித்துப் பாருங்கள்.

இப்படியொரு நல்ல போதகரை / சுவிசேஷகரை தேவன் உங்களுக்கு கொடுத்திருக்காவிட்டால் எப்படி நீங்கள் கிறிஸ்துவுக்குள் வந்திருப்பீர்கள் ?

உங்கள் சபையிலுள்ள மக்களெல்லாம் எப்படி கிறிஸ்துவுக்குள் வந்திருப்பார்கள், அற்புதசுகம் பெற்றிருப்பார்கள் ? சிந்தித்துப் பாருங்கள்.

உங்கள் போதகர் ஒரு நாளில் தன்னை கர்த்தருக்கு அர்ப்பணித்ததினாலே அல்லது பெற்றோர் அவரைக் கர்த்தருடைய ஊழியத்திற்கு அர்ப்பணித்ததினாலே இன்று அவர் மூலமாக எத்தனையோ குடும்பம் கர்த்தருக்குள் வந்துள்ளார்கள்.

இந்த வரிசையில் உங்கள் குடும்பத்திலும் ஒரு ஊழியர் எழும்ப வேண்டாமா ? உங்களையே அர்ப்பணியுங்கள் அல்லது பிள்ளைகளை கர்த்தருக்கு அர்ப்பணியுங்கள்.

பெனினாளுக்கு 10 ஆண்பிள்ளை. ஆனால் ஒரு பிள்ளையை கூட தேவனுக்கு அர்ப்பணிக்கவில்லை. ஆனால் அன்னாளுக்கோ ஒரே ஒரு பொருத்தனையின் பிள்ளை. அதை கர்த்தருக்கே அர்ப்பணித்தாள். ஒரு தீர்க்கதரிசியாக மாறினார். தாவீதை ஒரு ராஜாவாக அபிஷேகம் பண்ண கர்த்தர் சாமுவேலைப் பயன்படுத்தினார். எத்தனை ஆசீர்வாதம் ! இந்த ஆசீர்வாதம் உங்கள் குடும்பத்திற்கு வேண்டாமா ?

சபை போதகர்களே ! தசமபாகம் கர்த்தருக்கு கொடுக்க சபை மக்களை ஊக்குவிக்கிறீர்கள். ஆனால் பத்தில் ஒரு பகுதி ஜனங்களையாவது கர்த்தருடைய ஊழியத்திற்கு தங்களை முழுநேர பணிக்கு அர்ப்பணிக்க ஊக்குவிக்கிறீர்களா ?

இன்று சபை போதகர்களுக்கு தங்கள் சபைகளிலிருந்து ஊழியர்கள் எழும்ப வேண்டுமென்ற தரிசனம் கிடைத்து விட்டால் எத்தனையோ ஊழியங்கள் வளரும்.

***சிந்திப்போம் ! ஜெபிப்போம் ! செயல்படுவோம்!***

**பிதாவானவர் கனம்பண்ணுவார். தேவனுக்கே மகிமை!**

## 2009 செப்டம்பர் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

**மாவட்டம் :** மதுரை **யூனியன் :** உசிலம்பட்டி **நாள் : 12.09.09**

**கூடுமிடம்:** **பாஸ்டர் இம்மானுவேல், மாரநாத ஜெபவீடு,**
கவுண்டம்பட்டி ரோடு, நாடார் சரஸ்வதி ஸ்கூல் எதிரில்,
உசிலம்பட்டி–625 532. மதுரை மாவட்டம். செல்:**9865027950**

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை & வாக்குத்தத்த தேவசெய்தி

**இருளடைந்த நீர், விடியற்காலத்தைப் போலிருப்பீர். யோபு 11:17**

**நடு இரவு ஜெபம் - மறு நாள் துதி ஆராதனை**

| நடு இரவு ஜெபம் | மறு நாள் துதி ஆராதனை |
|---|---|
| **நாள் : 31.08.2009** திங்கள் | **நாள் : 01.09.2009** செவ்வாய் |
| **நேரம் :** 7PM-12Mid Night | **துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM |
| **இராப்போஜனம் :** இரவு 12மணி | **வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM |

**நடைபெறும் இடம்**

**TVGM தலைமை அலுவலகம்**
**100 – கிராமம்,**
**சோமரசம் பேட்டை ( ஆஸ்பத்திரி ஸ்டாப் ) திருச்சி.**

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக் எடுத்து அனுப்ப வேண்டிய முறை**

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)
**T.V.G.M. SOCIAL SERVICE** (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)
**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து
**MR. STEPHEN CHRISTOPHER, SB 12491010 18538 CANARA BANK,**
**Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu.**
**என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, கடைசி பக்கமுள்ள TVGM தலைமை அலுவலக முகவரிக்கு நோக்கத்தையும் உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு அனுப்பி உதவுங்கள்.**
**எங்கள் Email: 100village@tvgm.org- மூலம்**
**நீங்கள் காணிக்கை அனுப்பியுள்ள விபரத்தை தெரியப்படுத்துங்கள்.**

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

Return Request
TVGM Publication Trust
4/274, Hundred Village,
Somarasampettai,
Trichy - 620 102. India.

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011

**Posting Date 25th at H.P.O. Trichy.**

30.06.09 முதல் 29.07.09 வரை திருச்சி **TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளை** நேடியாக பார்வையிட்டு சிறப்பு விருந்தளித்த Mrs. பூரணலட்சுமி ( பேரன் பிறந்தநாள்) மற்றும் சகோதரி பெல்லா ராபர்ட்( மகன் பிறந்தநாள்), சகோதரி மார்கிரெட் சத்தியமூர்த்தி ( கணவர் & பேத்தி பிறந்தநாள் ) அவர்களுக்கும், பிள்ளைகளுக்கு பேனா வழங்கிய சகோ.ஜெயராமன்(அட்வகேட்) அவர்களுக்கும் தனது பிறந்த நாளில் இனிப்பு வழங்கிய திரு.செல்லையா மற்றும் சகோ.ஜார்ஜ் எபநேசர் ( தாயார் பிறந்தநாள் ) அவர்களுக்கும் நன்றி.





## TVGM தலைமை அலுவலக முகவரி

**காணிக்கை, பத்திரிக்கை சந்தா, ஜெபவிண்ணப்பம், 100-கிராம ஊழிய அனுமதிஅட்டை, ஜெபவீடு அப்ளிகேஷன், ஆபிஸ் ஸ்டாப் அப்ளிகேஷன் மற்றும் சகல தொடர்புகளுக்கும்:-**

**MR.STEPHEN CHRISTOPHER, DIRECTOR.**

# TAMIL VILLAGE GOSPEL MISSION

**"100 - VILLAGE"**

**SOMARASAMPETTAI, TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.**

STD Ph : **0- 431 - 2607241**
FAX : **0- 431 - 2607446**
CELL : **94871 92763**
**94435 44628**
**Email : 100village@tvgm.org**

***Website :***
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம், செய்தி 100 கிராம ஊழிய அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

REG. NEWS PAPER **R.N.I. Number : TNMUL / 2000 / 4011**

**HUNDRED VILLAGE MINISTRY** ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി हन्ड्रेड विलेज मिनिस्ट्री